**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 124/2016 தேதி:18.11.2024**

**வா.சா. 1 – கண்ணன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** ( 2 முதல் 6, 8 ம் பிரதிவாதிகள் தரப்பில்)

11 ம் பிரதிவாதி மதுரைவீரன் எனக்கு சொந்தகாரர் ஆவார். மதுரைவீரன் மனைவி லட்சுமி தங்கை உறவுமுறையாவார். 11 ம் பிரதிவாதி கடந்த 10.09.2019 அன்று சொத்து வாங்கிய விவரம் பற்றி என்னிடம் தெரிவித்தார்களா என்றால் இல்லை. லட்சுமி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர் என்னிடம் தகவல் சொல்லி தான் சொத்தை வாங்கினார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி உமாமகேஸ்வரி யார் என்று தெரியுமா என்றால் மதுரையில் இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். 10 ம் பிரதிவாதிக்கு எங்கள் ஊரில் சொத்தை அடையாளமாக காட்டியது யார் என்று எனக்கு தெரியாது. சண்முகம் மகன் கருப்பசாமி என்பவர் எனக்கு மைத்துனர் உறவுமுறையாவார். கருப்பசாமி தான் 10 ம் பிரதிவாதிக்கு மதுரையில் வீடு கட்டினார் என்றும் கருப்பசாமி மூலமாக தான் 10 ம் பிரதிவாதிக்கு எங்கள் ஊரில் சொத்து காட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டது என்றும் மைத்துனர் கருப்பசாமி 10 ம் பிரதிவாதிக்கு சொத்து வாங்கி கொடுத்தை என்னிடம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. கருப்பசாமி குடும்பத்தோடு நல்லதுகெட்டதுக்கு கலந்து கொண்டதுண்டா என்றால் இல்லை. சண்டை சச்சரவு எதுவும் இல்லை. மைத்துனர் உறவுமுறையான கருப்பசாமி அவர்கள் வீட்டு நல்லதுகெட்டதுக்கு போகமாட்டேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதி முத்துமீனாள் எந்த வருடம் பராமரித்து வந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண்.218/3 சொத்து என் அம்மாவிற்கு பாத்தியப்பட்டதா இல்லையா என்றால் பாத்தியப்பட்டது. என் அம்மா மருதாயி சொத்தை கடந்த 12.03.1990 அன்று சர்வே எண்.218/3–யை எங்கள் ஊரை சேர்ந்த ராமன்சேர்வைக்கு ரூ.2000/–க்கு அடமானம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் மேற்படி பத்திரம் என் அம்மா அடமானம் கொடுத்த பத்திரம் தானா என்றால் எனக்கு படிக்க தெரியாது. 19.09.1995 அன்று ஆவண

எண்.1423 ன்படி ராமன்சேர்வைக்கு அடமானம் வைத்த பத்திரத்தை எங்கள் அம்மா திருப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் அம்மாவிற்கு எழுதபடிக்க தெரியாது. என் அம்மா பத்திர அலுவலகத்திற்கு யாரை அழைத்து செல்வார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கம்பிக்குடியில் பிறந்து வளர்ந்தேன் என்றால் ஆம். என் அம்மா, அப்பா, நான் காரியாபட்டியில் ஒன்றாக தான் குடியிருந்தோம். 28.08.2002 அன்று ஆவண எண்.1299/2002, சர்வே எண்.218/3–யை வினோபாநகரில் வசிக்கும் கருப்பையாவிற்கு என் அம்மா மருதாயி பத்திரம் ஏற்படுத்தி கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்.218/3 என் அம்மாவிற்கு கிடைக்க பெற்றதனால் தான் என் அம்மா மேற்சொன்ன மூன்று பத்திரங்களையும் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பதியப்பட்ட ஆவணங்களை தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. 25.08.2016 அன்று பிரதிவாதியாகிய காளிஸ்வரி, சீதாலட்சுமி, முத்துமீனாள் ஆகியோர்கள் சேர்ந்து வைரவன்சேர்வைக்கு ரூ.50/– பத்திரத்தில் விடுதலை ஆவணம் எழுதி கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. என் மைத்துனர் கருப்பசாமி தற்போது இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார். இறந்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே என் அம்மாவிற்கும் அவர் சகோதரர்களுக்கும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றும், அதனை மேற்கோள் காட்டி தான் பிரதிவாதிகளும் பல்வேறு சொத்துக்களை வேறுவேறு நபர்களுக்கு விற்பனை செய்தார்கள் என்றும் மேற்படி விவரங்கள் தெரிந்து கொண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றும் என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( 7 ம் பிரதிவாதி தரப்பில்)

12 லக்க சொத்திற்கு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 12 லக்க சொத்திற்கு சர்வே எண்கள் ஓரளவிற்கு தெரியும். நான்குமால், விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியாது. பி பட்டியல் சொத்து என் தாத்தா வழி சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பி பட்டியல் 2, 3 லக்க சொத்துக்கள் என் தாத்தாவிற்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். என் தாத்தா வைரவன் 10.11.1989 அன்று இறந்துபோனார். என் தாத்தா இறந்த பின்பு பி பட்டியல் 2, 3 லக்க சொத்துக்கள்

1ம் பிரதிவாதி, ராமர் பாகத்திற்கு கிடைத்து அவர்கள் பெயரில் பட்டா எண்.1131 தாக்கலாகியிருந்தது பற்றி எனக்கு தெரியாது. பி பட்டியல் 2, 3 லக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதி, ராமர் பெயரில் பட்டா தாக்கலாகி அவர்கள் தீர்வை செலுத்தி வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. யார் தீர்வை செலுத்தினார்கள் என்றால் கூட்டாக அனுபவித்து அவர்கள் தீர்வை செலுத்தினார்கள். நானோ, என் அம்மாவோ அந்த சொத்துக்களுக்கு எந்த காலத்திலும் தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும், ராமரும் அனுபவித்து வந்ததால் அவர்கள் தீர்வை செலுத்தி வந்தார்கள் என்றால் சரிதான்.பி பட்டியல் 2, 3 லக்க சொத்துக்களை 7ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதியும், ராமரும் சேர்ந்து 07.03.2012 அன்று கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த கிரையவிவரம் எனக்கும், என் அம்மாவிற்கும் தெரியும். கிரைய வாங்கிய வருடம் நான் எந்தவித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் மனு கொடுத்தேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றும் ஆவணம் தாக்கல் செய்யததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2012 ஆண்டிலிருந்து கிரையம் பெற்ற கண்ணன் தான் அந்த சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். கிரையம் ஏற்பட்டு 4 வருடங்கள் கழித்து தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காலவரையறை சட்டத்தின்படி கிரையம் கொடுத்து 4 வருடங்களுக்கு பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளததால் வழக்கில் கோரியுள்ள 2ம் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பி பட்டியல் 2, 3 லக்க சொத்துக்களுக்கு கிரையத்திற்கு பின்பு 7ம் பிரதிவாதி பெயரில் 2033 நம்பர் பட்டா ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. 7ம் பிரதிவாதி போட்ட எதிர்வழக்குரையை வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தார். பட்டாமாறுதல் விவரங்கள் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் சொன்னது பிறகும் 7ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் வழக்கு நடந்து கொண்டிருப்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. கிரையத்திற்கு பிறகு பி பட்டியல் 2, 3 லக்க சொத்துக்களை 7ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். அதற்கு முன்பு 1ம் பிரதிவாதியும்,

ராமரும் மேற்படி சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும், ராமரும் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்ததால் நான் கூட்டு அனுபவத்தில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளது தவறு என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்திற்கு நான் எந்தஒரு ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் என்னிடம் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். 7ம் பிரதிவாதி சரியான மறுபயன் கொடுத்து தாவா பி பட்டியல் 2, 3லக்க சொத்துக்களை நல்லெண்ணத்தின் பேரில் கிரையம் பெற்றுள்ளதால் அந்த சொத்துக்கள் சம்மந்தமாக எனக்கு எந்த ஒரு பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பி பட்டியல் 2, 3லக்க சொத்துக்களை பொறுத்து என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்குவிசாரணைகளை 10, 11ம் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுகொள்கிறார்கள்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.